10

குடும்பச் சட்டத்தில் சொத்துப் பிரிக்கப்படும் விதம்

TML 010

ஒன்ராறியோவில் உள்ள பெண்களுக்கான குடும்பச் சட்டம்

அனைவரும் பெண்கள்.
ஒரு குடும்பச் சட்டம்.

உங்களுடைய உரிமைகளை அறியுங்கள்.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

குடும்பச் சட்டத்தில் சொத்துப் பிரிக்கப்படும் விதம்

சட்டம்சார்ந்த விடயங்களின் அடிப்படை விளக்கத்தை உங்களுக்குத் தருவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். தனிப்பட்ட சட்டபூர்வ ஆலோசனையை மற்றும் உதவியை இது பிரதியீடு செய்யமாட்டாது. குடும்பச் சட்ட விவகாரங்களில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால், உங்களுக்குள்ள தெரிவுகளை விளங்கிக்கொள்வதற்கும் உங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முடியுமான விரைவில் சட்டபூர்வ உதவியைப் பெற்றுக்கொள்தல் பரிந்துரைக்கப்படுகின்றது. குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரை எப்படிக் கண்டறிவது மற்றும் அவருக்கு எப்படிக் கட்டணம் செலுத்துவது என்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு, "உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கு உதவி தேடல்" என்ற எங்களுடைய கையேட்டைப் பாருங்கள். "குடும்ப ஒப்பந்தங்கள் (Domestic Contracts)", என்பது பற்றிய எங்களுடைய கையேட்டையும் நீங்கள் வாசிக்க விரும்புவதுடன், "குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிதல்", "திருமணமான மற்றும் இணைந்துவாழும் பங்காளர்களின் சொத்துரிமைகள் மற்றும் கடமைகள்", மற்றும் ஏனைய குடும்பச் சட்ட விடயங்களிலான எங்களுடைய இணையக் கருத்தரங்குகளைப் பார்ப்பதற்கும் நீங்கள் விரும்பக்கூடும். இந்த ஆதாரவளங்கள் யாவும் எங்களுடைய இணையத்தளத்தில் உள்ளன: www.onefamilylaw.ca.

நீங்களும் உங்களுடைய பங்காளரும் பிரியும் போது, உங்களிடம் இருந்த குடும்ப உடைமைகளில் எதை, எவர் எடுப்பது என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். வீடு, கார், தனிப்பட்ட மற்றும் வீட்டுப் பொருள்கள், ஓய்வூதியம், வங்கிக் கணக்குகள், ஏனைய முதலீடுகள் போன்ற ஒருவருக்குச் சொந்தமான அனைத்தும் **உடைமைகள்** எனப்படும். உடைமைகள், **பொறுப்புகளையும்/கடன்களையும்** (debts) உள்ளடக்குகின்றது. கடன் வாங்கிய பணத்தைத் திரும்பச் செலுத்தும் உறுதிமொழியே பொறுப்பு ஆகும். வீட்டின் மீதான அடமானக் கடன் (mortgage), கார் குத்தகைக் கடன் (lease) மற்றும் கடன்உதவியையும் (loan) பொறுப்பு உள்ளடக்கலாம்.

காணி, வர்த்தகம், வங்கிக் கணக்குகள், முதலீடுகள் போன்ற சில உடமைகளின் பெறுமதி காலத்துடன் மாறலாம். குடும்ப உடமைகளைப் பங்காளர்கள் பிரிக்கும்போது, தாங்கள் இனி ஒன்றுசேர மாட்டோம் எனத் தெரிந்தநிலையில் அவர்கள் பிரிந்த நாளன்று இருந்த உடமையின் பணப் பெறுமதியை, உடமையின் பெறுமதியாகப் பொதுவாகப் பயன்படுத்துகின்றனர்.

பங்காளர்கள் பிரியும் போது, அவர்களுடைய உறவின்போது அவர்களுக்கு இருந்த உடமைகளைப் பிரிப்பதற்கென சட்டரீதியான விதிமுறைகள் இருக்கின்றன. குடும்ப உடமைகளைப் பிரிப்பதற்கான விதிமுறைகள் மிகவும் சிக்கலானவையாக இருக்கலாம். இத்தகைய நிலமையொன்றில் நீங்கள் இருந்தால், குடும்பச் சட்டச் சட்டத்தரணி ஒருவரிடம் சட்டரீதியான ஆலோசனை பெறுதல் பரிந்துரைக்கப்படுகின்றது.

ஒன்ராறியோவில், பங்காளர்கள் பிரியும் போது, அவர்களுடைய உடமைகள் பிரிக்கப்படும் விதம், அவர்கள் சட்டப்படி திருமணமானவர்களா இல்லையா என்பதில் தங்கியுள்ளது. திருமணமான தம்பதிகள் பிரிந்தால், அவர்களுடைய குடும்ப உடமைகளின் பெறுமதி இயல்பாகவே பங்கிடப்படும். இணைந்து வாழும், ஆனால் சட்டப்படி திருமணம் செய்யாத தம்பதிகளுக்கு, பங்கிடப்பட்ட உடமைகளில் சில உரிமைகள் இருக்கலாம், ஆனால் இந்த உரிமை தானாக அவர்களுக்குக் கிடைக்க மாட்டாது, இதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியிருக்கலாம்.

திருமணமான தம்பதிகளிடையே உடமைகள் பிரிக்கப்படும் விதம்

திருமணத்தை ஒரு பொருளாதார கூட்டாண்மையாகச் சட்டம் பார்ப்பதுடன், திருமணமான துணைவர்கள் இருவரும் உறவு, நிதி மற்றும் பிற வழிகளில் சமமான பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள் என அனுமானிக்கின்றது. திருமணமான தம்பதிகள் பிரியும்போது, திருமண பந்தத்தில் இருந்தபோது பெற்றுக்கொண்ட அதேவேளையில் பிரியும்போதும்

சொந்தமாக வைத்திருக்கும் உடமைகள் யாவற்றையும் சமமாகப் பங்கிட வேண்டும் என்பதே பொது விதியாகும். பொதுவாக, துணைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த உடமைகளை தாங்களே வைத்திருப்பார்கள், ஆனால் திருமண பந்தத்தின்போது அவர்களுடைய அந்த உடமையின் பெறுமதி அதிகரித்திருந்தால், அதற்கு யார் பணம் செலுத்தினால் என்ன, அந்த உடமையில் எவருடைய பெயர் சட்டரீதியாக இருந்தாலென்ன, அந்த அதிகரிப்பு பங்கிடப்பட வேண்டும். இதைச் செய்வதற்கு, பொதுவாக, ஒரு துணைவர், மற்றத் துணைவருக்கு, **“சமப்படுத்தல் கொடுப்பனவு”**, என அழைக்கப்படும் பணத்தைச் செலுத்த வேண்டும். இந்தச் சமப்படுத்தல் கட்டணத்தைக் கண்டறிய உதவும் படிமுறைகள் கீழே விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

குடும்ப உடமைகளைப் பிரிப்பதற்கான நடைமுறை என்ன?

திருமணம் செய்த தம்பதிகளுக்கிடையே குடும்ப உடமையைப் பிரிக்கும் நடைமுறை **சமப்படுத்தல்** என அழைக்கப்படுகிறது. இந்தச் சமப்படுத்தல் நடைமுறையில் இரண்டு பிரதான படிகள் உள்ளன.

படிமுறை 1: நிகர குடும்ப உடமைகளைக் கணித்தல் (NFP)

துணைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய அனைத்துச் சொந்த உடமைகளிலிருந்தும் அவர்களுடைய பொறுப்புக்களைக்(கடனை) கழித்தால் வரும் பெறுமதியைக் கணிக்க வேண்டும். **அது நிகர குடும்ப உடமை (NFP)** என அழைக்கப்படும்.

இதைச் செய்வதற்கு, துணைவர்கள் ஒவ்வொருவரும் முதலில், அவர்களுடைய திருமணத்தன்று அவர்களுடைய உடமைகளிலிருந்து அவர்களுடைய பொறுப்புக்களைக் (கடனை) கழித்தால் வரும் பெறுமதியையும் பின்னர் பிரியும்போது அவர்களுடைய உடமைகளிலிருந்து அவர்களுடைய பொறுப்புக்களைக் (கடனை) கழித்தால் வரும் பெறுமதியையும் கணிக்க வேண்டும். நிகர குடும்ப உடமைக் கணிப்பை

பூர்த்திசெய்வதற்கு, பிரியும்போது அவர்களுடைய அனைத்து உடமைகளிலிருந்தும் அவர்களுடைய பொறுப்புக்களைக் (கடனை) கழித்தால் வரும் பெறுமதியிலிருந்து அவர்களுடைய திருமணத்தன்று அவர்களுடைய உடமைகளிலிருந்தும் அவர்களுடைய பொறுப்புக்களைக் கழித்தால் வரும் பெறுமதியைக் கழிக்க வேண்டும். உதாரணத்துக்கு:

துணவர் A – மொத்த உடமைகளிருந்து பொறுப்புகளை/கடன்களைக் கழித்தல்	
பிரியும் திகதியில்:	$120,000
திருமணமான திகதியில்:	$50,000
பிரியும் நேரம் – திருமண நேரம் =	$70,000
துணவர் A யின், நிகர குடும்ப உடமை (NFP) =	**$70,000**

துணவர் B – மொத்த உடமைகளிருந்து பொறுப்புகளை/கடன்களைக் கழித்தல்	
பிரியும் திகதியில்:	$45,000
திருமணமான திகதியில்:	$25,000
பிரிதல் நேரம் – திருமண நேரம் =	$20,000
துணவர் B யின், நிகர குடும்ப உடமை (NFP) =	**$20,000**

படிமுறை 2: குடும்ப உடமைகளின் அதிகரிப்பைச் சமமாகப் பகிர்தல்

துணைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த நிகர குடும்ப உடமையைக் (NFP) கணித்த பின்னர், அதிகமான நிகர குடும்ப உடமையைக் கொண்ட துணைவர் அதில் கொஞ்சத்தை மற்றத் துணைவருடன் பகிர வேண்டும். இந்த உதாரணத்தில், $70,000 நிகர குடும்ப உடமையைக் கொண்ட துணைவர் A, $20,000 நிகர குடும்ப உடமையைக் கொண்ட துணைவர் B உடன் கொஞ்சத்தைப் பகிர வேண்டும்.

இரண்டு அளவுகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தின் பாதியைத் துணைவர் A, துணைவர் Bக்குச் செலுத்த வேண்டும். இதுவே **சமப்படுத்தல் கொடுப்பனவு** ஆகும்:

சமப்படுத்தல் கொடுப்பனவு – குடும்ப உடமைகளின் அதிகரிப்பைத் துணைவர்கள் சமமாகப் பங்கிடல்

துணைவர் A NFP =	$70,000
துணைவர் B NFP =	$20,000
துணைவர் A – துணைவர் B =	$50,000,

இது குடும்ப உடமைகளின் அதிகரிப்பு ஆகும்.

$50,000 இரண்டாகப் பிரித்தால் =	$25,000

துணைவர் A, சமப்படுத்தல் கொடுப்பனவாக $25,000 துணைவர் Bக்குச் செலுத்த வேண்டும்.

சில வழக்குகளில், சமப்படுத்தல் அளவு நியாயமற்றதாக இருந்தால், நீதிமன்றம் வித்தியாசமானதொரு சமப்படுத்தல் கொடுப்பனவை உத்தரவிடக்கூடும். உதாரணத்துக்கு, திருமணத்தின் போது துணைவர் ஒருவர் பெரிய பொறுப்புகளை/கடன்களை மறைத்திருந்தால், அல்லது வேண்டுமென்று அதிகளவான பொறுப்புகளை/கடன்களை பெற்றிருந்தால், அதிக பணம் செலுத்தும்படி அவருக்கு நீதிமன்றம் உத்தரவிடலாம்.

பொது விதிகளுக்கான விதிவிலக்குகள்

i) துணைவர் ஒருவருக்கு உடமைகளிலும் அதிகமான பொறுப்புகள்/கடன்கள் இருப்பின் என்ன நடக்கும்?

சில நேரங்களில், துணைவர் ஒருவரின் பொறுப்புகள்/கடன்கள், நேர்மறையான பெறுமதியுள்ள (சொத்துக்கள் எனவும் அழைக்கப்படுகிறது) உடமைகளிலும் அதிகமாக இருக்கும். அவர்களுடைய பொறுப்புகள்/கடன்களைச் செலுத்த போதுமான பணம், திருமணத்தின் முடிவில், அவரிடம் இல்லை என்பது இதன் பொருளாகலாம்.

சில வேளைகளில், துணைவர் ஒருவரின் அனைத்து உடமைகளினதும் பெறுமதி திருமண பந்த காலத்தின்போது குறைந்திருக்கலாம். அவர்கள் திருமணம் செய்த நேரத்தில் இருந்ததைவிட திருமணத்தின் முடிவில், அவரிடம் குறைவான உடமைகள் இருக்கின்றன என்பது இதன் பொருளாகலாம்.

இந்த நிலைமைகளில் ஏதாவது ஒன்று நடந்தால், அந்தத் துணைவரின் நிகர குடும்ப உடமைகளுக்கான (NFP) கணிப்பீடு, பூச்சியமாக அல்லது அதை விடக் குறைவாக (அது ஒரு ஏதிர்மறை இலக்கமாகும்) இருக்கும்.

இப்படியான நிலைமைகளின் போது, சமப்படுத்தப்பட்ட கொடுப்பனவைக் கணிப்பதற்கு, நிகர குடும்ப உடமைகளுக்கான (NFP) கணிப்பீடு, பூச்சியமாக அல்லது எதிர்மறை இலக்கமாக இருந்தால், அந்தத் துணைவருக்கான சமப்படுத்தல் கொடுப்பனவு, பூச்சியம் ($0) (எதிர்மறையாக இருப்பதற்குப் பதிலாக) எனக் கொள்ளப்படும். இப்படிச் செய்வதால், அதிகளவு உடமைகளை வைத்திருக்கும் துணைவர், மற்றைய துணைவரின் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு உதவி செய்ய வேண்டியோ அல்லது நியாயமற்ற சமப்படுத்தப்பட்ட கொடுப்பனவைக் கொடுக்க வேண்டியோ இருக்கமாட்டாது.

ii) குடும்ப வீடு

திருமணமான தம்பதியினரின் வீடு, மற்றைய அனைத்து உடமைகளிலிருந்தும் வித்தியாசமானதாகக் கருதப்படுகின்றது. குடும்ப வீடு, **திருமணபந்த வீடு** எனவும் அழைக்கப்படுகின்றது, நீங்கள் பிரியும்போது, இந்த வீட்டில்தான் உங்களுடைய குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்தது.

திருமணபந்த காலத்தின்போது, துணைவர்கள் அந்தக் குடும்ப வீட்டை வாங்கியிருந்தால், பிரியும்போது அதற்கு இருக்கும் பெறுமதியைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள். திருமணமான தம்பதியர் பிரியும்போது, அந்தக் குடும்ப வீடு சட்டபூர்வமாக எவருடைய பெயரில் இருந்தாலும்சரி, பிரியும்நாளன்று இருக்கும் அதன் முழுப் பெறுமதியைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் உரிமை துணைவர்கள் இருவருக்கும் உள்ளது.

சமப்படுத்தும் நடைமுறையிலிருந்து குடும்ப வீடு விலக்கி வைக்கப்பட வேண்டுமென நீங்களும் உங்களுடைய துணைவரும் ஒப்பந்தம் (திருமண ஒப்பந்தம் அல்லது பிரிதல் உடன்பாடு) ஒன்றில் கையெழுத்திட்டிருந்தால்

மட்டுமே, அந்தக் குடும்ப வீட்டின் பெறுமதி சமப்படுத்தும் கொடுப்பனவுக்குள் அடங்கமாட்டாது.

ஆனால், திருமணத்தின் முன், துணைவர்களில் ஒருவருக்குச் சொந்தமாக அந்த வீடு இருந்திருப்பதுடன், பிரியும்போதும் அது குடும்ப வீடாகவும் இருந்திருந்தால், அதற்கு விசேடமான விதிமுறைகள் உள்ளன. திருமணத்தின் முன், அந்த வீட்டைச் சொந்தமாக வைத்திருந்த துணைவர், பிரியும்நாளன்று இருக்கும் அந்த வீட்டின் பெறுமதியை தன்னுடைய நிகர குடும்ப உடமையைக் (NFP) கணிக்கும்போது சேர்த்துக்கொள்வார் ஆனால் திருமண நாளன்று சொந்தமாக வைத்திருந்த உடமைகளில் அந்த வீட்டின் பெறுமதியைச் சேர்த்துக்கொள்ள மாட்டார்.

துணைவர் ஒருவர் திருமண பந்தத்துக்குள் அந்த வீட்டைக் கொண்டு வந்திருப்பதுடன், பிரியும்போதும் அதைச் சொந்தமாக வைத்திருந்தால், அந்தத் துணைவரின் நிகர குடும்ப உடமைகள், வெறுமனே திருமண பந்தத்தின்போது பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தை மட்டுமன்றி, வீட்டின் முழுப் பெறுமதியையும் உள்ளடக்கும் என்பது இதன் கருத்தாகும். சமப்படுத்தல் கொடுப்பனவுக் கணிப்பில், இது பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

iii) உடமைகளுக்குள் அடங்காதவை– அன்பளிப்புகள் மற்றும் பூர்வீக சொத்து

குடும்ப உடமைகளைப் பிரிப்பதற்கான பொது விதிகளில், விசேடமான அன்பளிப்புகளுக்கும் பணத்துக்கும் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. விதிவிலக்குகளுக்கான சில உதாரணங்கள்: அவருடைய துணைவர் அல்லாத இன்னொருவரிடம் இருந்து ஒரு துணைவருக்குக் கிடைத்த அன்பளிப்புகள் அல்லது பணம்; இன்னொருவருடைய ஆயுள் காப்புறுதியிலிருந்து கிடைத்த ஆதாயங்கள்; மற்றும் பூர்வீக சொத்து. ஒருவர், உங்களுக்காக விரும்பித் தரும் அல்லது இறந்தபின்னர் விட்டுச் செல்பவை பூர்வீக சொத்து எனப்படும்.

திருமண பந்தத்தின் போது உங்களுக்குக் கிடைக்கும் இத்தகைய உடமைகள், பொதுவாக “விதிவிலக்கான உடமைகள்”, ஆகும், இவை அந்தத் துணைவரின் நிகர குடும்ப உடமைகள் (NFP) கணிப்பில் சேர்க்கப்படுவதில்லை என்பது இதன் பொருளாகும். திருமணகாலத்தின் போது, ஆயுள் காப்புறுதி அல்லது பூர்வீக சொத்து போன்ற அன்பளிப்புக்களிலிருந்து வரும் பணத்தை நீங்கள் செலவழித்தால், அது எவ்வளவு பணம் என்பதைக் கண்டுபிடிப்பது சிரமமாகும், அதனால் செலவழித்த அந்தப் பணத்தின் அளவுக்கு அந்த நபரின் நிகர குடும்ப உடமைகள் (NFP) கணிப்பில் விதிவிலக்களிக்க முடியாது.

ஆனால், அந்த அன்பளிப்பு அல்லது பூர்வீக சொத்து குடும்ப வீட்டை வாங்குவதற்கு அல்லது அதை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தால், அது குடும்ப வீட்டின் பெறுமதியின் ஒரு பங்காக மாறும், அத்துடன் நிகர குடும்ப உடமைகள் (NFP) கணிப்பில் அது உள்ளடக்கப்படும் என்பதை அறிந்திருப்பது முக்கியமாகும்.

இணைந்துவாழும் ஜோடிகளின் உடமைகள் பிரிக்கப்படும் விதம்

உறவொன்றில் சேர்ந்து வாழும் ஜோடிகள், சட்டபூர்வமாகத் திருமணம் செய்யாமலிருப்பதைத் தெரிவுசெய்யும் போது, “**இணைந்துவாழும் (common-law)**” பங்காளிகள் எனச் சில வேளைகளில் அழைக்கப்படுகின்றனர். சட்டம் பல வழிகளில், இணைந்துவாழும் உறவுகளை அங்கீகரித்த போதும்கூட, திருமணமான தம்பதிகள் பிரியும்போதுள்ள குடும்ப உடமைகள் பங்கிடல் பற்றிய விதிகள் ஒன்ராறியோவில் இணைந்துவாழும் ஜோடிகளுக்குப் பொருந்தாது.

இணைந்துவாழும் உறவில், நீங்கள் ஒவ்வொருவரும் எந்த உடமைகளைக் கொண்டுவந்தீர்களோ, அவற்றுக்கு நீங்கள் சொந்தக்காரராக இருப்பீர்கள். அதே போல, நீங்கள் சேர்ந்து இருக்கும்போது உங்களுடைய சொந்தப் பணத்தில் என்னவெல்லாம் வாங்கினீர்களோ அவற்றுக்கு நீங்கள் சொந்தக்காரராக இருப்பீர்கள். நீங்களும் உங்களுடைய

பங்காளரும் பிரிந்தால், உடமையின் பெறுமதி அதிகரிப்பைப் பிரிப்பதற்கு அல்லது பங்கிடுவதற்கு இயல்பான உரிமை இருக்காது.

இருந்தாலும், நீங்களும் உங்களுடைய பங்காளரும் சேர்ந்து வாங்கிய உடமை உங்கள் இருவருக்கும் சொந்தமானதாக இருக்கும். நீங்கள் இருவரும் பிரியும்போது, இரண்டு பேருக்கும் பொதுவான சொந்தமாகவிருக்கும் சொத்தினைப் பிரிப்பதற்கு, உங்களில் ஒருவர் அல்லது நீங்கள் இருவரும் விரும்பினால், அதன் பெறுமதியின் ஒரு பகுதிக்கான உரிமை இருவருக்கும் இருக்கும். இது குடும்ப வீட்டையும் உள்ளடக்குகின்றது.

i) குடும்ப வீடு

இணைந்துவாழும் உறவிலுள்ள பங்காளார்களுக்கு, குடும்ப வீட்டின் பெறுமதியைப் பங்கிட்டுக் கொள்வதற்கு இயல்பான சம உரிமை இருக்காது. தம்பதிகளாக நீங்கள் வாழ்ந்த வீடு சட்டரீதியாக எவரின் பெயரில் இருக்கின்றதோ, அவருக்கே அந்த வீடு உரித்தாக இருக்கும்.

ii) இணைந்துவாழல் ஒப்பந்தங்கள்

நீங்கள் பிரிந்தால், உடமைகள் மற்றும் கடன்களை எப்படி நீங்கள் கையாள்வீர்கள் என்பது பற்றிய **இணைந்துவாழல் ஒப்பந்தம்** ஒன்றை நீங்களும் உங்களுடன் இணைந்துவாழும் பங்காளரும் எழுத முடியும். இணைந்துவாழல் ஒப்பந்தம் ஒன்று, சட்டரீதியான ஒரு ஒப்பந்தமாக இருப்பதற்கு, அது எழுத்தில் இருப்பதுடன், இரண்டு பங்காளர்களாலும் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்; அத்துடன் அந்தப் பங்காளர்கள் கையொப்பமிடுவதைப் பார்த்த அல்லது அதற்குச் சாட்சியாக இருந்த இன்னொருவரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும். இணைந்துவாழல் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட முன்னர், சட்டத்தரணி ஒருவருடன் கதைப்பது நல்லது.

iii) நீதிமன்றத்துக்குச் செல்லல்

இணைந்துவாழல் ஒப்பந்தத்தைப் பின்பற்றும்படி உங்களுடன் இணைந்துவாழ்ந்த பங்காளருக்கு உத்தரவிடும்படி நீதிமன்றம் ஒன்றை நீங்கள் கேட்க முடியும். உங்களிடம் இணைந்துவாழல்

ஒப்பந்தம் ஒன்று இல்லாமல் இருப்பதுடன், உங்களுடைய உடமைகளைப் பிரிக்கும் விதம் பற்றி உங்களால் ஒத்துவர முடியாவிட்டால் உங்கள் இருவரில் எவராவது நீதிமன்றத்துக்குப் போகலாம். தம்பதிகளாக நீங்கள் வாங்கியவற்றில் ஒரு பங்கைத் தரும்படி அல்லது அந்த உறவின்போது அந்த உடமையில் ஏற்பட்ட பெறுமதி அதிகரிப்பைப் பங்கிடும்படி நீதிபதி ஒருவரிடம் நீங்கள் கேட்க முடியும்.

இந்த வகையான தீர்ப்பைப் பெறுவதற்கு, அந்த உடமையின் பராமரிப்புக்கு அல்லது பெறுமதி அதிகரிப்புக்கு நீங்கள் பங்களித்திருக்கின்றீர்கள் என்று உங்களால் நிரூபிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். உதாரணத்துக்கு, உங்களுடைய பங்காளரின் வீட்டின் சில கட்டணச் சீட்டுக்களை நீங்கள் செலுத்தியதாக அல்லது நீங்கள் இலவசமாக வேலைசெய்து அவருடைய வர்த்தகத்திற்கு பெறுமதி சேர்த்ததாக உங்களால் நிரூபிக்க முடிந்தால், உங்களுக்குக் கொஞ்சப் பணம் கிடைக்கலாம். நீதிமன்றத்துக்குச் செல்வது பற்றி நீங்கள் யோசித்தால், சட்டத்தரணி ஒருவருடன் கதைப்பது முக்கியமாகும்.

குடும்ப வீட்டில் இருத்தல்

குடும்ப வீட்டில் யார் இருக்கப் போகிறார்கள், எவரால் அதை விற்க முடியும் என்பவை பற்றிய விதிகளும் பங்காளர்கள் சட்டபூர்வமாக திருமணம் செய்தவர்களா அல்லது இணைந்துவாழும் ஒரு உறவில் இருந்தவர்களா என்பதில் தங்கியிருக்கின்றது.

i) திருமணமான தம்பதிகள்

குடும்ப வீட்டை விற்கும்வரைக்கும், அல்லது நீதிமன்ற உத்தரவு அல்லது ஒப்பந்தம் ஒன்று வரும்வரைக்கும், திருமணமான துணைவர்கள் இருவருக்கும் குடும்ப வீட்டில் இருப்பதற்குச் சம உரிமை இருக்கின்றது; அந்த உடமையின் குத்தகை அல்லது உறுதி யாருடைய பெயரில் இருந்தாலும் அது பொருட்டல்ல. துணைவர் எவரும், மற்றத் துணைவரின் அனுமதி இல்லாமல், பூட்டுகளை மாற்றவோ, விற்கவோ,

அடமானம் செய்யவோ, வாடகைக்கு விடவோ அல்லது உள்குத்தகைக்கு விடவோ முடியாது.

ii) இணைந்துவாழ்ந்த தம்பதிகள்

குடும்ப வீடுகளுக்கான விதிமுறைகள் இணைந்துவாழ்ந்த தம்பதிகளுக்குப் பொருந்தாது. அந்த உடமையின் குத்தகையில் அல்லது உறுதியில் பெயர் இல்லாவிடின், அந்த இணைந்துவாழ்ந்த பங்காளருக்கு அந்தக் குடும்ப வீட்டில் இருக்க இயல்பாக உரிமை கிடையாது. ஒரு பங்காளர் மட்டுமே அந்த உடமையின் சொந்தக்காரராக இருந்தால், மற்றப் பங்காளரின் அனுமதி இல்லாமல், அந்த நபர் பூட்டுகளை மாற்றலாம், விற்கலாம், அடமானம் செய்யலாம், வாடகைக்கு விடலாம் அல்லது உள்குத்தகைக்கு விடலாம். வீட்டை அல்லது தொடர்மாடிக் கட்டிடக் குடியிருப்பை நீங்கள் வாடகைக்கு எடுத்திருந்தால், குத்தகையில் கையொப்பமிட்ட குடியிருப்பாளருக்கு மட்டும் அங்கு தொடர்ந்திருப்பதற்கு உரிமை இருக்கும்.

iii) துன்புறுத்தல் இருக்கும் சூழ்நிலைகளில்

சட்டரீதியாக **திருமணம்** செய்த தம்பதிகளில், பங்காளர் ஒருவர், தனக்கு மற்றப் பங்காளர் தீங்கிழைக்கலாம் எனப் பயந்தால், அந்தப் பயப்படும் நபர், குடும்ப நீதிமன்றமொன்றில், குடும்ப வீட்டினைத் **தனி உடைமையாக்கும் உத்தரவு** ஒன்றை கேட்க முடியும். தனி உடமை என்றால் பங்காளர் ஒருவருக்கு மட்டுமே குடும்ப வீட்டிலிருக்கவும் பூட்டை மாற்றவும் உரிமையுண்டு. அந்த வீட்டுக்குப் போகும் உரிமை மற்றப் பங்காளிக்கு இல்லாமல் போகும்.

தம்பதிகளுக்குச் சொந்தமான வீட்டுக்குப் பொதுவாக தனியுடமை உத்தரவுகள் பொருந்தும். இரண்டு பங்காளர்களும் வீட்டின் பெறுமதியைப் பங்கிட வேண்டுமென்ற உரிமையைத் தனியுடமை மாற்ற மாட்டாது. குடும்ப வீட்டின் உரிமைத்துவம் மற்றும் பங்கிடப்படும் பெறுமதி பற்றித் தீர்மானிக்கும் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும்வரைதான் பொதுவாகத் தனியுடமை உத்தரவு செல்லுபடியாகும்.

இணைந்தவாழ்க்கை உறவிலுள்ள துணைவர் ஒருவர் குடும்ப வீட்டின் தனிப்பட்ட உடமைக்கான உத்தரவைப் பெற முடியாது.

அன்னியோன்யமான துணைவரால், ஒருவர் அல்லது அவருடைய பிள்ளைகள் துன்புறுத்தப்படுவார்கள் எனப் பயப்படுபவர், அவர் திருமணமாகியிருந்தாலென்ன இல்லையென்றாலென்ன கட்டுப்படுத்தும் உத்தரவொன்றை குடும்ப நீதிமன்றம் ஒன்றிடம் கேட்க முடியும். பங்காளர் ஒருவரை அல்லது அவரது பிள்ளைகளை துன்புறுத்தும் மற்றப் பங்காளர், அவர்களுடன் தொடர்புகொள்ளவதற்கோ அல்லது அவர்களுக்கு அருகில் செல்லவதற்கோ அனுமதிக்கப்படமாட்டார் என **கட்டுப்படுத்தும் உத்தரவு** கூறலாம். குடும்ப வீடு, பணியிடம், பாடசாலை மற்றும் பாதுகாக்கப்படும் பங்காளரும் பிள்ளைகளும் பொதுவாகப் போகும் இடங்களிலிருந்து விலகியிருத்தலை இது உள்ளடக்கலாம்.

திருமண பந்தத்தில் இருக்கும் அல்லது திருமண பந்தத்தில் இருந்த அல்லது சேர்ந்து வாழும், அல்லது சேர்ந்து வாழ்ந்த, ஒருவர், துன்புறுத்தும் பங்காளருக்கு எதிராகக் கட்டுப்படுத்தும் உத்தரவு ஒன்றைப் பெற முடியும். அவர்கள் சொந்த வீட்டில் இருக்கின்றார்களா அல்லது வாடகை வீட்டில் இருக்கின்றார்களா, உடமையின் சட்டரீதியான உறுதியில் எவரின் பெயர் இருக்கின்றது என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல. குடும்ப வீட்டுக்கு யார் சொந்தக்காரர் என்பதிலோ அல்லது வீட்டின் பெறுமதி எப்படிப் பங்கிடப்படும் என்பதிலோ கட்டுப்படுத்தும் உத்தரவு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது.

ஒதுக்கப்பட்ட நிலத்திலுள்ள (Reserves) குடும்ப உடமைகளுக்கான விதிகள்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட குடும்பச் சட்டம் **முதல் குடிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களின்**, காணி, வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்குப் பொருந்தாது. ஆனால், ஒதுக்கப்பட்ட நிலங்களுக்குச் சொந்தமான ஒரு குழு (Band) தங்களுடைய நிலங்களுக்கான தங்களுடைய சொந்த

விதிகளை வைத்திருக்காவிட்டால், மத்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம், அந்த ஒதுக்கப்பட்ட நிலங்களிலுள்ள குடும்பச் சொத்துக்களுக்கும் பொருந்தும்.

திருமணமான பங்காளர்களுக்கும் ஒரு வருடத்துக்கு அல்லது அதற்கும் அதிகமாக இணைந்துவாழும் பங்காளர்களுக்கும் மத்திய அரசாங்கச் சட்டம் பொருந்தும். **ஒதுக்கப்பட்ட நிலங்களில் குடும்பச் சொத்துக்கள் இருக்கும் பூர்வீககுடிப் பெண்களுக்கும், பூர்வீககுடி அல்லாத பெண்களுக்கும் இது முக்கியமானதாக இருக்கின்றது.**

மத்திய அரசாங்கச் சட்டம் பின்வருவனவற்றைக் கூறுகின்றது:

- உறவின் போது குடும்ப வீடு, காணி, மற்றும் கட்டிடங்களின் அதிகரித்த பெறுமதியின் அரைவாசிக்கான உரிமை இரண்டு பங்காளர்களுக்கும் இருக்கின்றது;

- தம்பதிகள் பிரிந்த பின்னர், பங்காளர் ஒருவருக்கு வீடு சொந்தமாக இருந்தாலென்ன, இல்லையென்றாலென்ன அந்தப் பங்காளிக்கு அந்தக் குடும்ப வீட்டில் இருக்க உரிமையுண்டு எனத் **தனித்த இருப்புக்கான உத்தரவை** நீதிமன்றம் உத்தரவிட முடியும்;

- அன்னியோன்யமான பங்காளர்களிடையே அல்லது வீட்டில் வன்முறை இருக்கும்போது, தீங்கிலிருந்து பாதுகாப்பதற்கான அவசரகால நிலை இருந்தால், அந்தக் குடும்ப வீட்டில் 90 நாட்களுக்கு வாழ்வதற்கு அந்தப் பாதிக்கப்பட்ட பங்காளருக்கு உரிமை இருக்கின்றது என்ற **அவசரகால பாதுகாப்பு உத்தரவை** நீதிமன்றம் உத்தரவிட முடியும். மற்றப் பங்காளருக்கு வீடு சொந்தமாக இருந்தாலென்ன, இல்லையென்றாலென்ன அந்த மற்றப் பங்காளர் விலகியிருக்க வேண்டும்.

ஒதுக்கப்பட்ட நிலங்களில் இருக்கும் குடும்பச் சொத்து பற்றிய மேலதிக தகவல்களுக்கு, பூர்வீககுடிப் பெண்களுக்கான, "குடும்பச் சட்டத்தின்படி எப்படிச் சொத்து பிரிக்கப்படுகின்றது", என்ற FLEW கையேட்டைப் பார்க்கவும். ஒதுக்கப்பட்ட நிலங்களில் உள்ள குடும்ப வீட்டுக்கான பெண்களின் உரிமையைப் பாதுகாத்தல்", என்ற எங்களுடைய இணையக்கருத்தரங்கையும் நீங்கள் பார்க்கலாம். இந்த ஆதாரவளங்கள் எங்களுடைய www.onefamilylaw.ca என்ற வலைத்தளத்தில் உள்ளன.

இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEW ன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை மாகாணத்தின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

Law Foundation of Ontario நிதி உதவி அளிக்கும் அதே வேளையில் இந்த வெளியீட்டின் உள்ளடக்கம், Foundation ன் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நெருக்கமான உறவு ஒன்று முறியும் போது வன்முறைக்கான ஆபத்து அதிகளவில் உண்டு. உங்களுக்கு உடனடி ஆபத்து இருந்தால், 911 ஐ அழையுங்கள். நீங்களோ உங்களுக்குத் தெரிந்தவரோ ஆபத்தில் இருந்தால் உதவி பெறுவது பற்றிய தகவல்களுக்கு FLEW இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

ஒன்ராறியோவில் வாழும் பிரெஞ் பேசும் பெண்ணாக நீங்கள் இருந்தால், குடும்ப சட்டவியல் நீதிமன்ற செயல்முறைகளின் போது பிரெஞ் மொழிச் சேவைகளை அணுகுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுடைய உரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, ஒரு சட்டத்தரணியை, ஒரு சமூக சட்ட மையத்தை அல்லது Femaide ஆதரவு இணைப்பை 1-877-336-2433, TTY 1-866-860-7082 ல் தொடர்பு கொள்ளுங்கள்.

பிரெஞ்சில் சேவைகளை எப்படி அணுகுவது என்பது பற்றிய மேலதிக விபரங்களை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca என்ற எங்களுடைய வலைத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்

தமிழில் உள்ள குடும்பச் சட்ட விடயங்கள்*

1. முரண்பாட்டுக்கான மாற்றுத் தீர்மானமும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளைக்கான ஆதரவு (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான பொறுப்பும் அணுகலும் (TML 005)
6. குடும்ப ஒப்பந்தங்கள் (TML 006)
7. குடும்பச் சட்ட மத்தியஸ்தம் (TML 007)
8. குடிவரவாளர், அகதி மற்றும் அந்தஸ்து அற்ற நிலைகளிலுள்ள பெண்களுக்கான குடும்பச் சட்ட விவகாரங்கள் (TML 008)
9. உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைக்கு உதவி தேடல் (TML 009)
10. **குடும்பச் சட்டத்தில் உடமைகள் பிரிக்கப்படும் விதம் (TML 010)**
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணைக்கான ஆதாரம் (TML 012)

* *இந்தக் கையேடு பல வடிவங்களிலும் மொழிகளிலும் கிடைக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.onefamilylaw.ca ஐப் பார்வையிடுங்கள். உங்களுடைய குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் விளங்கிக்கொள்வதற்கு உதவும் மேலதிக விடயங்களையும் இந்த இணையத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

The Law Foundation of Ontario

Funded by: / Financé par :
Ontario

இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEWன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை நிதிவழங்கியோரின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை